# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# *2014 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, போதிராஜாராம கல்வி மற்றும் கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*


அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

*2014*, ஓகத்து மாதம் *22* ஆம் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *22.00*** **தபாற் செலவு : ரூபா *20.00***

## 2014 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, போதிராஜாராம கல்வி மற்றும் கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ. கூட்டி. 35/2011

## போதிராஜாராம கல்வி மற்றும் கலாசார மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"போதிராஜாராம கல்வி மற்றும் கலாசார மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றம் ஒன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லா குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இதற்குமுன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தி யும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்துடன் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, போதிராஜாராம கல்வி மற்றும் கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

போதிராஜாராம கல்வி மற்றும் கலாசார மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** (1) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "போதிராஜாராம கல்வி மற்றும் கலாசார மன்றத்தின்" தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்

பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ''போதிராஜாராம கல்வி மற்றும் கலாசார மன்றம்'' என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்க லாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கத்துக்காகவும் வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பொன்றாக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதிலும் மற்றும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. (1) கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) பௌத்தர்களின் ஆன்மீக அபிவிருத்தியின் வளர்ச்சியை இலக்காகக்கொண்டு,பௌத்த விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளுதலும், போதிராஜாராம விகாரைக்கு விசாலிப்புகளைச் சேர்ப்பதற்கு அவசியமான அனைத்து வழிமுறைகளையும் மேற்கொள்ளுதலும் ;

(ஆ) பௌத்தர்களின் ஒழுக்க விழுமியங்களை உயர்வுபடுத்துவதற்கு ஊக்கமளித்தலும், அந்நோக்கத்துக்காக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடங்குதலும் நடைமுறைப்படுத்துதலும் ;

(இ) பௌத்தர்களுக்கு உதவியளிக்கும் நோக்கத்துடன் முன்பள்ளிகள், நாள் கவனிப்பு நிலையங்கள், சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், மற்றும் தம்ம பாடசாலைகள் என்பவற்றைத் தாபிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் ;

(ஈ) ஒன்றில் வறுமை அல்லது வேறு இயலாமைகள் காரணமாகத் தங்களுடைய கல்வியைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு முடியாதுள்ள இலங்கைப் பௌத்த மாணவர்களது நலனோம்புகைக்காக பல்வேறு தரப்பட்ட கருத்திட்டங்களைத் தொடங்குதலும் நடாத்துதலும் ;

(உ) கல்வி மேம்பாட்டை நோக்கமாகக்கொண்டு மகாசங்க, தசசில் மாதாக்கள் மற்றும் இளையோர், முதியோர் ஆகிய பௌத்த மக்களுக்கு விரிவுரைகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், வேலையமர்வுகள், கல்விச் சுற்றுலாக்கள், கண்காட்சிகள் ஆகியவற்றை நடாத்துதலும், வெளியீடுகளை அச்சிடுதலும் ;

(ஊ) பௌத்த நம்பிக்கையுடைய வறியோர், முதியோர், உடல், உள இயலாமைகள் உள்ள அநாதைகள் மற்றும் ஆதரவற்றோர் என்போரின் நன்மைக்காக அத்தகைய உதவி மற்றும் வீடமைப்பும் போன்ற அத்தகைய நிவாரணச் சேவைகளை வழங்குதல் ;

(எ) பௌத்தர்களின் நலனோம்புகையை உறுதிப்படுத்தும் பொருட்டு சிறுவர் சுகாதாரம், வளர்ந்தோர் சுகாதாரம், நோய்க்கட்டுப்பாடு என்பன தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதலும் மற்றும் சிகிச்சையளிப்பு மருத்துவ சிகிச்சைகள், உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு நிலையங்கள் என்பவற்றை நடாத்துதலும் மருத்துவ உதவிகளை வழங்குதலும் ;

(ஏ) கலாசாரம், இலக்கியம், கலைகளும், கைப்பணிகளும், சுதேச வைத்தியம் மற்றும் சூழல் பேணல் என்பன போன்ற இலங்கையின் சம்பிரதாயபூர்வமான மரபுரிமையைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடங்குதலும் நடாத்துதலும் ; அத்துடன்

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடைய வேறேதேனும் வெளிநாட்டு அல்லது உள்நாட்டு நிறுவனத்துடன் ஒத்திசைதல்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதில், கூட்டுத்தாபனமானது அத்தகைய நடைமுறைப்படுத்தலானது, இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் அபிப்பிராயம், பிறப்பிடம் அல்லது அத்தகைய ஏதுக்களின் ஏதேனும் ஒன்றின் அடிப்படையின் மீதான ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*மத்திய அரசாங்கத்தின் அல்லது மாகாணத்தின் அமைச்சினது அல்லது திணைக்களத்தினது பணியுடன் முரண்பாடில்லாதிருப்பதனைக் கூட்டுத்தாபனம் உறுதிப்படுத்துதல்*

**4**. கூட்டுத்தாபனத்தின்குறிக்கோள்கள், கூட்டுத்தாபனத்தின் பணிக்கும், அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரேநேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5**. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமையும் நிர்வாகமும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான பதவிதாங்குநர்களின் அத்தகைய எண்ணிக்கையினரைக்கொண்ட (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தொழிற்பாட்டுப் பேரவை ஒன்றினால் நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கின்ற மன்றத்தின் பேரவையானது, 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் கூட்டுத்தாபனத்தின் முதலாவது பேரவை நியமிக்கப்படும் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் வரை கூட்டுத்தாபனத்தின் பேரவையாகத் தொழிற்படுதல் வேண்டும்.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பேரவையானது இச்சட்டம் தொடங்குகின்ற தேதியிலிருந்து ஓர் ஆண்டிற்குள் நியமிக்கப்படுதல் வேண்டும் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) போசகர்களும் மதியுரைஞர்களும் உட்பட, பேரவையின் பதவிதாங்குநர் ஒவ்வொருவரும் மூன்றாண்டுக் காலப்பகுதி யொன்றுக்கு நியமிக்கப்படுதல் வேண்டும் அல்லது தேர்ந் தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எவரேனும் பதவிதாங்குநர் போசகர் அல்லது மதியுரைஞர் சொல்லப்பட்ட மூன்றாண்டுக் காலப்பகுதி கழிந்தபின்னர் மீள்நியமனத்துக்கு அல்லது மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகைமையுடைய வராதல் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநரின் இறப்பு, பதவி விலகுதல், உடற்ற குதியீனம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும்பட்சத்தில் பேரவையானது அதன் விதிகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய வெற்றிடத்தை நிரப்பு வதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) வின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள் எந்த உறுப்பினரை அவர் பின்னுறுகின் றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப் பகுதிக்கு மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

கூட்டுத்தாப னத்தின் தத்துவங்கள்.

**6**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத் தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனம், பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச்செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மைத்தானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், செய்யவும் புரியவும் நிறைவேற்றவும் தத்துவம் கொண்டதாதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப் படக்கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்தல், வாடகைக்கு எடுத்தல், நிர்

மாணித்தல் மற்றும் காணிகள் அல்லது கட்டிடங்களை புனரமைத்தல் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதெனக் கருதக்கூடியவாறு அவற்றைக் கையாளுதலும் அல்லது கையுதிர்த்தலும் ;

(ஆ) பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி நிதிகளைக் கடனாகப் பெறுதலும் அல்லது திரட்டுதலும் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெறுதலும் :

ஆயின், பேரவையானது, கூட்டுத்தாபனத்துக்கு அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக் கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும், நிதி என்னும் விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும் ;

(இ) மாற்று உண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கொடுத்து மாற்றத்தகு சாசனங்களைத் தயாரித்தல், வரைதல், ஏற்றுக் கொள்ளுதல், கழிவு வழங்குதல், புறக்குறிப்பிடுதலும், கொடுத்துமாற்றுதலும், வாங்குதலும் விற்றலும் மற்றும் வழங்குதலும் ; அத்துடன் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தலும், தொழிற்படுத்துதலும், பேணுதலும், மூடிவிடுதலும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடுசெய்தலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பை அல்லது ஏதேனும் அசையாத அல்லது தனிப்பட்ட ஆதனத்தைப் பொறுப்பேற்றலும், ஏற்றுக்கொள்ளுதலும், நிறைவேற்றுதலும், புரிதலும் மற்றும் நிருவகித்தலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவிநீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துதலும், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், பணிக்கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துதலும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் விரிவுரைகளையும் கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் ஒழுங்குபடுத்துதலும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடைய வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைதலும் ஒருங்கிணைதலும் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் ஆளணியினருக்குப் பயிற்சியளித்தலும் ; அத்துடன்

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைத் தகுந்தமுறையிலும் பயனுள்ளவகையிலும் நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான வேறெல்லாக் காரியங்களையும் செய்தலும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7.** (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தலும், உறுப்பினர்களைச் சேர்த்தலும், அவர்கள் விலகுதலும், அவர்களை விலக்குதலும் அல்லது அவர்கள் பதவி நீங்குதலும் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்களும் ;

(ஆ) பேரவையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவிதாங்கு நர்கள் பதவியை வறிதாக்கல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மற்றும் பதவிதாங்குநர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்கள் என்போரின் நியமனத்திற்கான நியதிகளும், நிபந்தனைகளும், அவர்களின் தத்துவங்களும், பணிகளும் மற்றும் கடமைகளும் ;

(ஈ) பேரவையினது அல்லது அதன் ஏதேனும் உப குழுவினது கூட்டங்களைக் கூட்டுதலிலும் நடாத்துதலிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையும், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும் அவற்றின் நிகழ்ச்சிநிரலும், அவற்றிற்கான கூட்ட நடப்பெண்ணும் மற்றும் அவற்றில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) பேரவையினதும், கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினரொருவராகவிருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும், கூட்டுத்தாபனத்தைக் கலைத்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்பட்டதைப்போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள், எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*உறுப்பினர்கள் பற்றிய இடாப்பு.*

**8.** பேரவையானது உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும் ; இதில், உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் வேறு அத்தியாவசியமான விபரங்கள் என்பன உள்ளடக் கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**9.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண் டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்திற்காகவும் அது தொடர்பாகவும் கொடைகள், இறுதிவிருப்பாவணங்கள், நன்கொடைகள், ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள், கட்டணம் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும், பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவிற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், கடமை களையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறை வேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கணக்குகளும், கணக்காய்வும்.*

**10.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டா தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம், அதன் வருமானமும், செலவினமும், சொத்துக்களும், பொறுப்புக்களும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் வேறெல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் விதிகளின் படி, கூட்டுத்தாபனத்தின் கணக்குகள், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்றவொரு கணக்காய்வாளரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "தகைமைபெற்ற கணக்காய் வாளர்" என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப் பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறே தேனும் நிறுவகத்தின் உறுப்பினராக உள்ளவரும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்கா ளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைக் கொண்டவராக உள்ளவருமான தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) எக் கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளரும் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும், இருப் பதுடன் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராக தொழில்புரிவதற்காக வழங் கப்பட்ட சான்றிதழ் ஒன்றைக் கொண்டவராகவும் உள்ளாரோ அக் கணக் காளர்கள் குழுமம் ஒன்று

எனப் பொருள்படும்.

வருடாந்த அறிக்கை.

**11.** (1) பேரவையானது ஒவ்வொரு நிதியாண்டுக்குமான கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையை, கணக்காய்வுசெய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து

சமூகசேவைகள் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் பதிவாளருக்கும், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாகத் தனிவேறான கணக்கொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

மன்றத்தினால் செலுத்தப்பட வேண்டியவையும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலவையுமான தனிசுகள்.

**12.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று உளதாயிருக்கும் மன்றத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாக உள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**13.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனம் ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையில் அதற்குரித்தாகவரக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனங்கள் யாவும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும், 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*பணங்களையும் ஆதனத்தையும் பயன்படுத்துதல்.*

**14.** எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனமும் அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் ; அதன் பாகம் எதுவும், பங்கிலாபம், மிகையூதியம், அல்லது இலாபம் என்றவகையில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமலோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**15.** (1) கூட்டுத்தாபனத்தின் இலச்சினை, சபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது ; அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாக கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் இலச்சினை, சபையினால் முடிபு செய்யப்படக்கூடியவாறான சபையின் பதவிதாங்குநரொருவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

*கலைக்கப் பட்டதன்மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.*

**16.** (1) கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்தபின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது, ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களை உடையதும் அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டம்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, பொதுக்கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளின்மூலம் கலைப்புக்கு நேர்முன்னர்தோதான நிறுவனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**17**. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப் படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**18**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்